II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 337 /2023**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.K.Palanikumar, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 23.09.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Manjula | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி=</u>

எனது கணவரின் நிறுவனத்தின் பெயர் சன் ரிஷி பிளக்சி பேக் பிரைவேட் லிமிடெட் ஆகும். எனது திருமணத்திற்கு முன்பிருந்தே அந்த நிறுவனம் இருந்தது. எனது மகன்கள் பெயர் சந்தோஷ் ராஜ், ரிஷிகேசவ் ஆகும். எங்கள் திருமணத்திற்கு பிறகு சன் ரிஷி என்ற பெயர் மாற்றப்பட்து. அதற்கு முன்பு அவரது அக்காள் ஜெயலட்சுமி பெயரில் நிறுவனம் இருந்தது. முதலில் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வந்தது. தற்போது சொந்த கட்டிடத்திற்கு மாறிவிட்டோம். இது எங்கள் சொந்த நிறுவனம் ஆகும். அது காட்டூர் சிட்கோ ரெட்ஹில்ஸில் உள்ளது. 2010 ல் சொந்தமாக ஆரம்பித்தோம். நரசத்பேட்டையில் உள்ள எனது தந்தையின் நண்பர் தாஸ் என்வரை எனக்கு தெரியும். நிறுவனத்தை சொந்தமாக ஆரம்பிக்க நான் என் தந்தையிடம் பணம் கேட்டேன் என்றும் அவர் தன்னிடம் இல்லை, தாஸிடம் கேட்டு வாங்கி தருவதாக சொன்னார் என்றாலும் சரியல்ல. என் தந்தை தாஸிடம் அழைத்து கொண்டுபோய் விட்டார். தாஸ் வட்டிக்கு பணம் கொடுத்தார். எனது சொத்து ஆவணங்களை வைத்து கடன் வாங்கினேன். 5 வருடம் வட்டி கொடுத்தேன். நான் 2 வருடம் மட்டுமே வட்டிகொடுத்தேன் என்றால் தவறு. என் தந்தைக்கு சுகர் மற்றும் பி.பி

வந்து 30 வருடமிருக்கும். நான் 2 வருடத்திற்கு பிறகு வட்டி கொடுக்காததால் தாஸ் எனது தந்தையிடம் வட்டியும் அசலையும் கேட்டார் என்றும் என் தந்தை சொத்தை விற்று தருவதாக சொன்னார் என்றாலும் தவறாகும். என் தந்தை தனது குத்தம்பாக்கத்தில் இருந்த சொத்தை விற்று அந்த கடனை அடைத்தார் என்றால் எனக்குத் தெரியாது. என் தந்தை தனது மருத்துவ செலவிற்கு என்னிடம் பணம் கேட்டபோதும் நான் கொடுக்காமல் அலைகழித்தேன் என்றால் சரியல்ல. மாதம் ரூ.5 ஆயிரம் கொடுத்து வந்தேன். என் தம்பியையும் எங்கள் தொழிலில் வேலைக்கு வைத்து மாதம் ரூ.10 ஆயிரம் கொடுத்தேன். நான் என் தம்பிக்கு ரூ.15 ஆயிரம் சம்பளம் கொடுக்கவேண்டும் என்றும் ஆனால் ரூ.10 ஆயிரம் மட்டும் கொடுத்துவிட்டு மீதி ரூ. 5 ஆயிரத்தை தான் என் தந்தைக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் என் தந்தைக்கு மாதம் ரூ.5 ஆயிரம் கொடுத்து கூடவே வைத்து தம்பி ரூபன்பாபுவிற்கு திருமணம் ஆகும் வரை பராமரித்தேன். எனது சுயநலத்திற்காக தான் என் தந்தையை கூட வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு 2021-2022 ல் ஒரு காலை எடுத்துவிட்டார்கள். அதற்கான செலவுகளையும் நான் தான் பார்த்தேன். மருத்துவ செலவுக்கான ரசீது என்னிடம் உள்ளது. வங்கி மூலமாக ரூ. 70 ஆயிரமும், கையில் இருந்து ரூ 50 ஆயிரமும் செலவு செய்தேன். அவருடைய மருத்துவ செலவுகள் ரூ.8 லட்சத்திற்கு மேல் ஆனது என்றும் அதனை ரூபன் பாபு தான் செய்தார் என்றாலும் தவறாகும். அவருடைய மருத்துவ செலவுகளுக்கும் தினசரி செலவுகளுக்கும் பணம் தேவைப்பட்டதால் எனக்கு கொடுத்திருந்த ரூ. 15 லட்சத்தை திருப்பி கேட்டார் என்றும் அதனால் நான் அவருக்கு 20.12.2022 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி பாகம் கோரினேன் என்றாலும் சரிதான். அதன் பிறகு சமரசமாக பேசி 24.05.2023 ல் எனக்கு

பதிவு செய்த செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார்கள் என்றால் எனக்குத் தெரியாது. எனது வழக்குரையில் இந்த விவரம் எனக்குத் தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. வழக்கறிஞருக்கு தான் தெரியும். எனது தந்தை திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியரிடம் என் மீது தனது வாழ்வாதாரத்திற்கும் மருத்துவ செலவிற்கும் பணம் கேட்டு ஒரு மனு கொடுத்தார் என்றால் சரிதான். எனது சகோதர்கள் மீதும் கொடுத்தார். இது தொடர்பாக என்னை விசாரித்தனர். நான் தனியாக வேலைக்கு செல்லாததால் என் கணவரிடம் கேட்டு கொடுப்பதாக சொன்னேன். என் கணவர் மறுத்துவிட்டார். என்னிடம் எழுத்து மூலமாக கேட்டபோது நான் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்வதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. அந்த உத்தரவில் நான், என் தந்தைக்கு மாதம் ரூ.8 ஆயிரம் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவு பி.சா.ஆ.1 ஆகும். அந்த உத்தரவின் படி நான் 2 வருடமாக என் தந்தைக்கு தொகை எதுவும் கொடுக்கவில்லை. என் தந்தைக்கு தொகை கொடுக்க கூடாது என்பதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பாகம் கோரும் சொத்தை எனது தந்தை, பெரியப்பா மற்றும் சித்தப்பா ஆகியோர் அடமானத்தில் இருந்து மீட்டுள்ளனர் என்றால் எனக்குத் தெரியாது. அந்த சொத்தை தான் என் தந்தை என் தாயாருக்கு 2003ம் ஆண்டு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. எனது வழக்குரையில் எனக்கு வரவேண்டிய பாகத்தை பொருத்து செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யவேண்டும் என்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். 2003ம் ஆண்டு பதிவு செய்த செட்டில்மெண்ட் ஆவணத்தை 20 ஆண்டுகள் கழித்து ரத்து செய்ய கோருவது கால

வரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது.

(இந்நிலையில் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்தற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).